# <u>செயற்குழுக் கூட்டம் (15-02-2023)</u>

இன்று நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில்,, உப தலைவரும், பொது செயலாளரும் நான்கு செயற்குழு உறுப்பினர்களும், கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஜனவரி மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. ஒரு லட்ச ரூபாய் வைப்பு நிதி (FIXED DEPOSIT) வைக்கத் தீர்மானம் நிறைவேறியது. சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையை வைப்பு நிதியாக மாற்றினால் வட்டி வருமானம் அதிகம் கிடைக்கும்.

3. திரு ரவிக்குமார் என்பவர் நமது இயக்கத்தில் ஆண்டு உறுப்பினராக விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆண்டு உறுப்பினராகிறார்.

4 தற்போதைய தலைவர் திரு ந. சுப்ரமணியன் அவர்கள் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்து அளித்த கடிதத்தை ஏற்றுக்கொண்டது. அவர் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக (15-02-2023) இன்று மாலை முதல் தலைவர் பொறுப்பிலிருந்து அவரை விடுக்கத் தீர்மானிக்கப்படுகிறது. உப தலைவர் திரு வெ. அய்யப்பன் அவர்கள் தலைவர் பொறுப்பைக் கூடுதலாக ஏற்று செயல்படவும் இந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது .

5. இறுதியில் பொதுச் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம் ஒப்பம்

வெ. அய்யப்பன் V கார்த்திகை ராஜன்
.தலைவர் பொதுச் செயலாளர்